கம்பனி நிதியம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பனி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைகளினுள்ளே தொடர்புடைய சட்ட திட்டங்களிற்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்தியுள்ளா என்பதும்,

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
கம்பனி சட்டத்தின் 394(3) பிரகாரம் கம்பனியின் பெயர் நீக்கப்பட்டு கோவைகள் மூடப்பட்டு 05 ஆண்டுகள் தொடக்கம் 12 ஆண்டுகள் வரையான காலம் கடக்கப்பட்டிருந்த 11 கம்பனிகள் e-Roc அமைப்பின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட கம்பனியாக	e-ROC அமைப்பின் கீழ் இந்த தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கு முடிந்த வகையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	e-Roc கணினி அமைப்பு சரியாக மற்றும் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தொடர்ந்தும் காணப்படுகின்றமையினால் உரிய திகதிக்கு கம்பனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை e-Roc அமைப்பின் ஊடாக சரியாக இனங்காண்பதற்கு இயலவில்லை என அவதானிக்கப்பட்டது.

1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	முதலீட்டு முதிர்வடைதல் இழப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 11,946,257 செலவு தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 8 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் சொத்துக்கள் அளவீட்டு அடிப்படையின் கீழ், சொத்தின் நேரியப் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் அல்லது குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2025 இறுதி கணக்கு அறிக்கைகள் தயாரிக்கும் போது அருவச் சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குகின்றேன்.	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நிதிச் சொத்துக்களின் அளவீட்டு அடிப்படையின் கீழ் சொத்தின் நேரியப் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 53 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்படுகின்ற அனைத்து எண் சார்ந்த தகவல்களுக்காகவும் கடந்த காலப்பகுதியின் ஒப்பிட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் மாற்றங்கள் காண்பிக்கப்படும் கூற்றில் ஒப்பிட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கம்பனி நிதியத்தின் மாற்றங்கள் அறிக்கையில் ஒப்பிட்டு ரீதியான தகவல்கள் 2025 ஆம் ஆண்டு தொடக்கம் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் ஒப்பிட்டு ரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 95 ஆம் பந்தியின் பிரகாரம் தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை இன் கீழ் ஒதுக்கீடுகள் தனியே காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 699,690,249 ஆன மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடு திரட்டப்பட்ட மிகைக்கு சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.	பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.	இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் தனியாக காண்பிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	நிதியத்தினால் கடந்த ஆண்டு சீராக்கல்களாக திரட்டப்பட்ட மிகைக்கு ரூபா 46,261,988 செலவு வைக்கப்பட்டு ரூபா 84,800,854 வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு	கம்பனி நிதியத்தின் மாற்றங்கள் அறிக்கையில் ஒப்பிட்டு ரீதியான தகவல்கள் 2025 ஆம் ஆண்டு தொடக்கம் இறுதி கணக்குகள் தயாரிக்கும்	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் திரட்டப்பட்ட மிகைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள

	நியமம் 03 இன் 47 மற்றும் 50 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பிட்டு பெறுமதிகள் மீண்டும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.	போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	கடந்த ஆண்டுகளின் சீராக்கல்கள் ஒப்பீட்டு பெறுமதிகளை மீள் அறிக்கையிடுவதன் ஊடாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.
(உ)	பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்வதெனில் சொத்துக்கள் வகுப்பே மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அலுவலக உபகரணங்களில் பகுதியொன்று மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அச் சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு பெறுமதிகளுக்கும், எஞ்சிய சொத்துக்கள் ரூபா 17,668,364 ஆன கிரயத்திற்கும் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டில் அலுவலக உபகரணங்கள் வகுப்பு மீள்மதிப்பீடு செய்தல் கடினமாக இருந்தமையினால் அதன் ஒரு பகுதி மட்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் மீள்மதிப்பீடுகளின் போது அச் சொத்துக்கள் சார்ந்த வகுப்பு முழுமையாக மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது சொத்துக்கள் வகுப்பு முழுவதும் மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.
(ஊ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 10 இன் 20 ஆம் பந்தியின் பிரகாம் அறிக்கையிடல் காலப்பகுதியில் நிதியத்தின் வருமானமாக இனங்காண்பதற்கு பதிலாக ரூபா 867,254,789 ஆன தொகை காசாக கிடைத்த வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.	நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் திரள் அடிப்படை பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே வருமானம் வகைப்படுத்தப்பட்டுள்ளது டன் கம்பனி பதிவாளரின் பெறுவனவாக காண்பிக்கப்பட்டுள்ள வருமானம் சேகரிக்கப்பட்ட முறை குறிப்பு 1 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் வருமானம் திரண்ட அடிப்படையில் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்பட வேண்டிய e-Roc கணினி அமைப்பு மீளாய்வாண்டின் போது மூதலனமாக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரியதாக 2021 ஆம் தொடக்கம் நிதியத்தின் பெறுமானத் தேய்வு கொள்கையான குறைந்து செல்லும் இருப்பு முறைக்கு	2021 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்பட வேண்டிய கணினி e-Roc அமைப்பு 2024 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்படும் போது குறைந்து செல்லும் இருப்பு முறைக்கு தேய்மானம் செய்வதற்கு பதிலாக நேர்கோட்டு முறையின்	பெறுமானத் தேய்வு கொள்கையின் பிரகாரம் தேய்மானம் சரியாக கணிக்கப்படல் வேண்டும். e-Roc அமைப்பு அருவச் சொத்தாக காண்பிக்கப்படல் வேண்டும்.

	பதிலாக நேர்கோட்டு முறையின் கீழ் தேய்மானம் செய்யப்பட்டிமையின் காரணத்தினால் தேய்மான ஒதுக்கம் ரூபா 2,462,756 அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. இங்கு சொத்துக்கள் 2,462,756, மீளர்வாண்டின் மிகை ரூபா 1,303,973 மற்றும் திரட்டப்பட்ட மிகை ரூபா 1,158,783 குறைவாக காண்பிக்கப்பட்டிந்தது. மேலும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 88 பந்தியின் பிரகாரம் தேறிய பெறுமதி ரூபா 35,267,283 ஆன இந்த e-ROC கணினி அமைப்பு அருவச் சொத்தாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது.	பிரகாரம் தேய்மானம் செய்தமையின் காரணத்தினால் சொத்துக்கள் மற்றும் திரட்டப்பட்ட நிதியம் ரூபா 2,462,755.62 குறைவாக இனங்காணப்பட்ட வதறு 2025 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	
(ஆ)	மீளாய்வாண்டில் நிதியத்தின் வருமானத்தில் திறைச்சேரிக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட மீதி திறைச்சேரி புத்தகங்களின் பிரகாரம் ரூபா 432,396,934 ஆன போதிலும், நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் அம் மீதி ரூபா 432,896,934 ஆகியமையினால் மீதிகள் இடையே ரூபா 500,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.	இந்த தவறு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	திறைச்சேரிக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட மீதி சரியாக கணக்குகளில் காண்பிக்கப்படல் வேண்டும்.
(இ)	நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 6,575,545 ஆன வாகனங்கள் மற்றும் ரூபா 657,554 ஆன வாகனங்கள் தேய்மான ஒதுக்கங்களுக்கு உரிய சொத்துக்கள் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையின் காரணத்தினால் குறித்த மீதிகளின் துல்லியம் கணக்காய்வின் போது உறுதி செய்யப்படவில்லை.	வாகன வகுப்பிலுள்ள கிரயத்தினுள் வாகனங்கள் அனைத்தினதும் கிரயம் காணப்படுகின்றமையினால் இது வரையில் ஒவ்வொரு வாகனத்தினதும் தனிப்பட்ட நிலுவைகள் மற்றும் ஒவ்வொரு வாகனத்தின் கீழும் தேய்மானம் கணிக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்கால கணக்கு நடவடிக்கைகளில் ஒவ்வொரு வாகனத்திற்காகவும் தனித்தனியே செலவுகள் என்ன என்பதை பரீட்சித்து ஒவ்வொரு வாகனங்களின் கீழ் தேய்மானம் ஒதுக்கப்பட்டு கணக்கு	ஒவ்வொரு சொத்துக்கள் உறுப்படிகளின் கிரயம், தேய்மானம் ஆகிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும்.

		வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	
(ஈ)	2007 ஆம் ஆண்டில் ஈ சேர்விசஸ் லங்கா கம்பனியின் 35 சதவீத அரசாங்க பங்களிப்பிற்காக அக் கம்பனியின் சாதார பங்குகள் மற்றும் முன்னுரிமை பங்குகள் கொள்வனவு செய்வதற்காக வர்த்தக, விற்பனை அபிவிருத்தி கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 90,275,000 பிறழாக நிதியத்தின் முதலீடாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2007 ஆம் ஆண்டில் இந்த கம்பனியின் பங்குகள் கொள்வனவு செய்தல் முதலீடாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையில் எந்தவொரு இலாபப்பங்கும் பெறப்பட்டிருக்கவில்லை. இது முதலீடாக கணக்கீடு செய்தல் சரியானதா என்று மற்றும் செலுத்தப்பட்ட தொகை தொடர்பாக மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய முறை தொடர்பில் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு அரச நிதித் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ் ஆலோசனை பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தற்போது குழுவொன்று நியமிக்கப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	முறையான பரிசோதனையொன்று நடத்தப்பட்டு குறித்த தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டில் நிதியத்தின் ஊடாக சேகரிக்கப்பட்ட ரூபா 246,637,828 மற்றும் செலுத்தப்பட்ட ரூபா 24,556,132 ஆன பெறுமதி சேர் வரி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	பெறுமதி சேர் வரி கணக்கீடு செய்வதற்காக பெறுமதி சேர் வரி கட்டுப்பாட்டு கணக்கொன்று 2025 ஆம் ஆண்டிற்காக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	பெறுமதி சேர் வரியின் சேகரிப்பு மற்றும் கொடுப்பனவுகள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 2(1) மற்றும் 102 ஆம் பிரிவு	2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 2(1) மற்றும் 102 ஆம் பிரிவு பிரகாரம் நிதியம் வருமான வரிக்காக பதிவு செய்வதற்கு அல்லது வரியிலிருந்து விலக்களிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் விலக்களிக்கப்பட்ட தொகைகள் பிரிவின் (அ) ை இன் கீழ் அரச திணைக்களங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதனால் வருமான வரி எதுவும் செலுத்தப்படவில்லை.	நிதியம் சட்ட ரீதியான நிதியமொன்றினால், வருமான வரிப் பொறுப்பை உறுதி செய்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2 நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,147,066,219 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 849,379,157 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 297,687,062 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு திறைச்சேரி உண்டியல் மற்றும் பிணைமுறி வட்டி வருமானம் ரூபா 201,376,870 இனால் மற்றும் கம்பனி பதிவாளர் நாயகத்தின் பெறுவனவு ரூபா 133,833,444 இனால் அதிகரித்ததுடன் மீண்டெழும் செலவினம் ரூபா 25,671,951 இனால் மற்றும் முதலீட்டு முதிர்வு இழப்பு ரூபா 11,946,257 இனால் அதிகரித்தமை முக்கியமான காரணங்களாக அமைந்திருந்தன.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 157(5) மற்றும் 527(1) பிரிவுகள் பிரகாரம் ஒரு கணக்காய்வாளராக இருப்பதற்கான தகைமைகள் மற்றும் பதிவு நடைமுறைகள் தொடர்பான கட்டளைகள் நாளதுவரையாக்கப்படாமையின் காரணத்தினால் கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட 1964 இன் கம்பனிகள் (கணக்கு பரிசோதகர்) கட்டளைகளின் கீழ் கணக்காய்வாளர்கள் பதிவு செய்யப்பட்டு வந்தனர்.	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 527(1) மற்றும் 157(5) பிரிவுகள் பிரகாரம் ஒரு கணக்காய்வாளராக இருப்பதற்கான தகைமைகள் மற்றும் பதிவு நடைமுறைகள் தொடர்பான கட்டளைகள் பிரகாரம் இது வரையில் எந்தவொரு சிக்கல் அல்லது கணக்காய்வு ஐயவினா இன்றி கடமை நிறைவேற்றப்பட்டுள்ளது. தேவையின் பிரகாரம் புதிய	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்காய்வாளர்கள் பதிவு செய்வதற்கு தொடர்புடைய 1964 கம்பனிகள் (கணக்கு பரிசோதகர்) கட்டளைகள் நாளதுவரையாக்கப்படல் வேண்டும்.

		கட்டளைகள் உருவாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	
(ஆ)	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 479 (2), (3) மற்றும் (4) உப பிரிவுகள் இரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலாக சட்டத்தின் நோக்கம் அமைவதற்காகத் தக்கவைக்கப்பட்ட நிதிகளை தவிர சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் அனைத்து கட்டணங்கள் அல்லது அறிவீடுகள் மற்றும் அறவிடப்படுகின்ற வரிகள் ஒருங்கிணைந்த வரிக்கு செலவு வைக்கப்பட வேண்டுமென்ற சட்டத்தின் திருத்தத்திற்கு 2016 மே 25 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சட்ட வரைவாளரினால் 2021 யூலை 30 ஆம் திகதி சட்டத்தின் குறித்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அவதானிப்பிற்காக வரைவு கம்பனிகள் பதிவாளருக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.	சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும்.
(இ)	கம்பனிகள் சட்டத்தின் 131 (1) மற்றும் (2) பிரிவுகள் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட 121,284 மீளாய்வாண்டிற்காக ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 119,295 கம்பனிகள் அதாவது 98 சதவீதம் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கடந்த ஆண்டுகளில் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிராத 112,586 கம்பனிகளில் 107,123 கம்பனிகள் அதாவது 95 சதவீதம் கட்டளையை மீறியுள்ளன. இவ்வாறு ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் 2024 யூன் 30 இல் உள்ளவாறு இனங்காணப்பட்ட மொத்த நிலுவை வருமானம் ரூபா 3,560,220,600 ஆகும். கம்பனிகள் சட்டத்தின் 131(4) பிரிவின்	நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்காத கம்பனிகள் தொடர்பாக கம்பனிகள் சட்டத்தின் 131(4) பிரிவின் பிரகாரம் அபராதம் அறவிடப்படல் வேண்டும்.

பிரகாரம் ஆண்டறிக்கை ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு முறை கம்பனிகள் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்படாதவிடத்து ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத அபராதம் விதிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		

3.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
அமப/21/1342/304/113 ஆம் இலக்க 2021 யூலை 26 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் நாயகமாக 2021 யூலை 06 ஆம் திகதி தொடக்கம் 03 ஆண்டுகளுக்காக பிரதி சொலிசிட்டர் நாயகம் நியமிக்கப்பட்டு அவருக்கு கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவிற்குரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திலிருந்து ரூபா 4,496,727 தொகை மற்றும் பிரதி சொலிசிட்டர் நாயகத்திற்குரிய கொடுப்பனவாக 2021 ஆகஸ்ட் தொடக்கம் 2024 யூன் 24 வரை கம்பனிகள் நிதியத்திலிருந்து ரூபா 9,119,275 செலுத்தப்பட்டிருந்தது.	அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் நாயகம் பதவிக்குரிய சம்பள கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய சலுகைகள் சேவை காலத்தினுள் கொடுப்பனவு செய்யப்பட்டது.	கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கும் இயல்பின் பிரகாரம் அதற்குரிய சம்பளம் மட்டும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
உள்ளக கணக்காய்வாளர் மீளாய்வாண்டு முழுதும் பதிற் கடமை உத்தியோகத்தரொருவர் இன்றி விடுமுறை பெற்றுக் கொண்டிருந்தமையினால் நிதியத்திற்கு உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.	பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவியில் பதிற்கடமைக்காக பொருத்தமான உத்தியோகத்தரொருவர் இணைத்து தருமாறு கோரி இரண்டு தடவைகளில் அப்போதிருந்த வரிசை அமைச்சான கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு கடிதங்தங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் உத்தியோகத்தரொருவர் இணைப்பதற்கு முடியவில்லை. வர்த்தக, வணிக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு	உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம் பெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.

அபிவிருத்தி அமைச்சின் ஊடாக இதற்காக கோரப்பட்டு பதிற் கடமைக்காக உத்தியோகத்தரொருவர் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.